30 MAY 2008
Eastern University, Sri Lanka.

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I 2005/2006 (வெளிவாரி)
## (மே 2008)

## FA 201 தமிழ் – சிங்கள கலை வடிவங்கள் பற்றிய சிறப்பு நோக்குடன் இந்திய கலைவடிவங்களின் வளர்ச்சிப் படிமுறை

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. இலங்கையின் கட்டிடக்கலை வளர்ச்சிப்படி முறையை வகைப்படுத்தி, கட்டிடக் கலையின் பண்புகளை உதாரணங்களுடாக விளக்குக.

02. தென்னிந்திய வரலாற்றில் பல்லவ மன்னர்கள் ஆண்ட காலப்பகுதியில் கட்டிடம் சிற்பம், ஓவியம், இசை, நடனம் ஆகிய கலை வளர்ந்த முறையினை விளக்குக.

03. இலங்கையில் வளர்ச்சியடைந்த சிற்பக்கலைக்கும், இந்தியாவில் வளர்ச்சியடைந்த சிற்பக் கலைக்குமான வேற்றுமைகள் யாவை?

04. ஐரோப்பியர் வருகையினால் தென்னிந்தியக் கலை வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் எவையெனக் கருதுகிறீர்.

05. இந்தியக் கலைகளின் செல்வாக்கு, இலங்கையில் வளர்ந்த கலைகளில் உட்புகுந்தமைக்கான காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக.

06. இலங்கைத் தமிழ், சிங்களக் கலைகளின் தேக்க நிலைக்கும், இந்தியக் கலைகளின் வளர்ச்சிக்குமான காரணங்களை அணுகுக.

07. இந்திய ஓவியக்கலையின் தத்துவங்களை விளக்குவதோடு, அதன் தாக்கம் இலங்கை ஓவியக்கலையில் இடம்பெறும் விதத்தினை விளக்குக.

08. இலங்கையின் நடனக்கலை வளர்ச்சியில், இந்திய நடனக் கலையின் செல்வாக்கு எந்தளவிற்குக் காணப்படுகின்றது என்பதனையும், இலங்கையில் காணப்படும் நடனக்கலையின் தனித்துவங்களையும் விளக்குக.

(5 x 20 = 100 புள்ளிகள்)

**********